**அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சேமலாப நிதியம் "பீ" - 2015**

---

அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சேமலாப நிதியம் "பீ" ("நிதியம்") இன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கணக்கு, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1979 யூன் 01 ஆம் திகதிய 38/19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் 9 ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் சேமலாப நிதியம் ''பீ'' இன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல் (எஸ்எல்எவ்ஆர்எஸ்/ எல்கேஏஎஸ்)

மீளாய்வாண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று எல்கேஏஎஸ் 01 – நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தலின் பிரகாரம் தயாரித்து ஏனைய நிதிக்கூற்றுக்களுடன் சேர்த்து கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

(அ) அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் (''வங்கி'') கீழ் பேணப்படுகின்ற நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பெறவேண்டிய குறைநிரப்பு பங்களிப்பிற்கும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட அதற்கு நேரொத்த மீதிகளிற்கும் இடையில் ரூபா 2,012,953 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 254,251 குறைநிரப்பு பங்களிப்புக்கள் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 816,975 ஆக கொண்டுவரப்பட்டிருந்தது. ஆகையால், அவ் இரண்டு தொகைகளுக்கிடையில் ரூபா 562,724 ஆன விளக்கமளிக்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 644,421 ஆன வரிக்கு முன்னரான மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 104,579 ஆன வரிக்கு முன்னரான மிகையை விளைவித்திருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 539,842 ஆன வீழ்ச்சியை சுட்டிக்காட்டுகின்றது. மீளாய்வாண்டின் போது வட்டி வருமானம் ரூபா 540,230 ஆல் குறைவடைந்தமையே இந்த வீழ்ச்சிக்கான பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2 செயற்பாட்டு மீளாய்வு

### 3.2.1 செயலாற்றல்

நிதியத்தின் பிரதான நடவடிக்கைகள் பின்வருமாறுள்ளன.

- முன்னைய சிலோன் அரச ஈட்டு வங்கிக்கு இணைப்புச்செய்யப்பட்ட அனைத்து ஊழியர்களின் சார்பில் சேமலாப நிதியத்தை சேகரித்தல்.
- அங்கத்தவர்களிற்கு ஓய்வூதிய நலன்களை செலுத்துதல்.
- நிதியத்திற்கு மேற்கொள்ளப்பட்ட அங்கத்தவர்களின் பங்களிப்புக்களினடிப்படையில் அவர்களிற்கு கடன்களை வழங்குதல்.

மேற்கறிப்பிடப்பட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கான மொத்த பெறுவனவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 273,240 ஆல் அல்லது 26 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. 2015 ஆம் ஆண்டின் இறுதியிலுள்ளவாறு ஓய்வூதிய நலன்களின் கொடுப்பனவிற்காக நிதியத்திற்கான அங்கத்தவர்கள் இருக்கவில்லை. ஆகையால், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் முழுத்தொகையும் அண்மைய எதிர்காலத்தில் நிதியத்தின் செயற்பாடுகளிற்காக நிறுத்திவைப்பதற்கென ரூபா 30,372 இற்கு குறைந்திருந்தது. மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டிலும் நிதியச் செயற்பாடுகளின் பொழிப்பு கீழே தப்பட்டுள்ளது.

| | 2015 | | 2014 | |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆரம்ப மீதி | | 8,814,132 | | 7,758,694 |
| கூட்டு: நிதியத்திற்கான பெறுவனவுகள் | | | | |
| - அங்கத்தவர்களின் பங்களிப்புக்கள் | 79,256 | | 95,385 | |
| - வங்கியின் பங்களிப்புக்கள் | 118,885 | | 143,078 | |
| - வட்டி வருமானம் | 584,057 | | 816,975 | |
| | | 782,198 | | 1,055,438 |
| கழி: நிதியத்திலிருந்தான கொடுப்பனவுகள் | | **9,596,330** | | **8,814,132** |
| - அங்கத்தவர்களிற்கான கொடுப்பனவுகள் | | (9,565,958) | | இல்லை |
| இறுதி மீதி | | **30,372** | | **8,814,132** |

(ஆ) கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போதும் முன்னைய ஆண்டிலும் நிதியத்தின் அங்கத்தவர்களிற்கு கடன்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை.